

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (16.05.2025) இராயபுரம் மண்டலம், வார்டு–54, கொண்டித்தோப்பு, அம்மன் கோயில் முதல் சந்து பகுதியில் ரூ.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட நியாயவிலைக் கடையினை திறந்து வைத்து, மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், மேயர் ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக்குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – மீ.அ.வைத்தியலிங்கம் – பரிதி இளம்சுருதி – ரபி அகமது பங்கேற்பு!

# தாம்பரம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிகளில் பாகநிலை முகவர்கள் கூட்டம்!

## மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தாம்பரம், மே 17-

தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தாம்பரம் மாநகரம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம் நாளை (18.05.2025 ஞாயிறு) மாலை 03.30 மணியளவில், முடிச்சூர் ரோடு, பழைய பெருங்களத்தூர், ஸ்ரீ பத்மாவதி திருமண மண்டபத்தில் எனது தலைமையிலும், பெருங்களத்தூர் தெற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.சேகர் வரவேற்புரையிலும் மாநகர மேயர் க.வசந்த குமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிக் கழகச் செயலாளர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், இரா.சுரேஷ், ஆ.நடராஜன் மற்றும் ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர்கள் முன்னிலையிலும் மாநகர நிர்வாகிகள் வ.விஜயரங்கன், இரா.நரேஷ்கண்ணா, பி.சதாசிவம், ஆதிமாறன், க.தேவேந்திரன், ஆர்.எஸ்.சங்கர், ஊராட்சிமன்றத் தலைவர்கள் மு.வேல்முருகன், சி.கே. ஜெகதீஸ்வரன், ஜனனி சுரேஷ்பாபு, அ.விநாயகமூர்த்தி, மாநகர மகளிரணி ரமணி ஆதிமூலம், மாநகர இளைஞரணி பி.கே.ஏ.சத்தியபிரபு, ச.ராஜேஷ், வீ.கார்த்திக், வே.சிவசுப்பிரமணியன் ஆகியோர்களும்,

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பாகநிலை முகவர்கள் கூட்டம் நாளை (18.05.2025 ஞாயிறு) மாலை 06.00 மணியளவில், பல்லாவரம் 200 அடி ரேடியல் சாலையில் உள்ள சுரபி பேலஸில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி தலைமையிலும், பல்லாவரம் தெற்கு பகுதிச் செயலாளர் இ.எஸ்.பெர்னாட் வரவேற்புரையிலும், மண்டலக்குழுத் தலைவர்கள் வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, பகுதிச் செயலாளர் த.ஜெயகுமார் மற்றும் ஒன்றியச் செயலாளர் ஜி.கே.ரவி ஆகியோர்கள் முன்னிலையிலும்

இவ்விரு கூட்டத்திலும் கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. காஞ்சி வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைத் தீர்மான குழுச் செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், தாம்பரம், பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் பரிதி இளம் சுருதி, ரபி அகமது ஆகியோர் கலந்து கொண்டு கருத்துகளையும், ஆலோசனைகளையும் வழங்க உள்ளனர்.

தாம்பரத்தில் பி.புகழேந்தி, பல்லாவரத்தில் பகுதிச்செயலாளர் ஏ.கே.கருணாகரன் நன்றியுரையாற்றுகின்றனர்.

மேற்சொன்ன இரண்டு நிகழ்ச்சிகளிலும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாநில, மாவட்ட, மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகநிலை முகவர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

தியாகராயர்நகர் மேற்குப் பகுதி தி.மு.க.

# வட்டச் செயலாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மயிலை த.வேலு – ஜெ.கருணாநிதி – எஸ்.மோகன் பங்கேற்பு! கே.ஏழுமலை அறிக்கை!

சென்னை, மே. 17- -

தியாகராயர்நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள் (B.L.A.2) ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் என்.ராமகிருஷ்ணன் தலைமையில் நாளை (18.05.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில், வடபழனி, வர்க்கிஸ் அவென்யு, என். துரைசுவாமி ரோடு, எஸ்.ஜி.டி.மஹால் நடைபெறுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சியில் சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ, தியாகராயர்நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தியாகராயர்நகர் கிழக்கு பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி, தொகுதிப் பார்வையாளர் எஸ்.மோகன் அகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு. மணி, கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொள்கின்றனர்.

எனவே வட்டக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தியாகராயர் நகர் மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தியாகராயர்நகர் கிழக்கு பகுதி தி.மு.க.

# வட்டச் செயலாளர்கள் - பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு! பகுதிச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, மே. 17- -

தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதி தி.மு.க. வட்டக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள் (B.L.A.2) நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவைத் தலைவர் மு.மணி வண்ணன் தலைமையில் (19.05.2025 - திங்கட்கிழமை) மாலை 6 மணி அளவில், தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் சென்னை தென் மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தியாகராயர் நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி, தொகுதிப் பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றார்கள்.

தியாகராயர்நகர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி, தலைமை செயற்குழு உறுப்பினர் கோ.சு.மணி ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

எனவே வட்டக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# திருவள்ளூர் கல்வி மாவட்டத்தில் “கல்லூரி கனவு திட்டம்” - 2025!

## சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. இராஜேந்திரன் வாழ்த்துரை!

திருவள்ளூர், மே 17 -

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு. க. ஸ்டாலின் அவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு - 2025 திட்டத்தை திருவள்ளூர் கல்வி மாவட்டம் திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பாண்டூர் இந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் திருவள்ளூர் மாவட்ட கல்வித் துறை சார்பில் மாவட்ட கல்வி அலுவலர் ( பொறுப்பு ) திருமதி. மோகனா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினரும், இந்திரா கல்வி குழுமத்தின் நிறுவன தலைவருமான வி. ஜி. இராஜேந்திரன் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்திரா கல்வி குழும நிர்வாக இயக்குனர் திருமதி. இந்திரா ராஜேந்திரன் மற்றும் கல்லூரி முதல்வர்கள் முனைவர் வேல்விழி, ஜாய்ஸ், டீன்.ஜெலஸ், கவிதா, டாக்டர். வீரக்குமார், டாக்டர். கணேஷ் ஆகியோர் முன்னிலையில் திருவள்ளூர் தொகுதிக்கு உட்பட்ட அரசு பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற பன்னிரண்டாம் வகுப்பு மாணவ - மாணவியர்கள் 1200 பேர் பங்கேற்றனர். துறை சார்ந்த அலுவலர்கள் தேன்மொழி, ரேய்சல் பிரபாவதி, பாலமுருகன், பி. ஆர். டி. எஸ்., டி. சி. எஸ்., நிகழ்ச்சியில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் வி. ஜி. இராஜேந்திரன் மாணவர்களுக்கு பள்ளி படிப்பை முடித்து உயர்கல்வி பெற்றிட வழிவகை செய்திடும் திட்டம் தான் இந்த கல்லூரி கனவு திட்டம். எனவே நீங்கள் அனைவரும் பொறுப்புடன் உயர்கல்வி பெற்று வாழ்க்கையில் நல்ல நிலைக்கு வர வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆசையாகும். எனவே மாணவ மாணவியர்கள் கல்லூரிகளில் சேர்ந்து நன்றாக படித்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஆர்.ஆர்.பி, தேர்வுகளில் வெற்றி பெற வேண்டுமென வாழ்த்தி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கழக ஒன்றிய செயலாளர்கள் கூளூர் எம். ராஜேந்திரன், எஸ். மகாலிங்கம், பொதுக்குழு உறுப்பினர் ப. சிட்டிபாபு, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி. எஸ். நேதாஜி ,இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் தா. மோதிலால், நகராட்சி முன்னாள் தலைவர் பொன். பாண்டியன், ஒன்றிய கழக நிர்வாகிகள் அ.ஆனந்த்ராஜ், த.நடராஜன், ஆ.கமலகண்ணன், காஞ்சிப்பாடி பி.சரவணன், கொப்பூர் டி.திலிப்குமார் , மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் வி. எஸ். சதீஷ், எம். எம். லிங்கேஷ்குமார், வா. சங்கர், என். சுரேஷ்குமார், டாலர் துரைசிங்கம் உள்ளிட்ட கல்லூரி பேராசிரியர்கள், பள்ளிகளின் இருபால் ஆசிரியர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.



காஞ்சி தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தொகுதி அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றியம் ஊனமலை ஊராட்சியில் உள்ள இருளர் மக்கள் பல ஆண்டுகளாக சிதலமடைந்த வீடுகளில் வசித்து வந்தனர் அவர்களின் நலன் கருதி கலைஞர் கனவு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் தமிழக அரசு சார்பில் 15 குடும்பத்திற்கு ரூபாய் ஐந்து லட்சம் மதிப்பீட்டில் புதிய வீடு கட்டுவதற்கான பணி மற்றும் வீடு கட்டுவதற்கான ஆணை வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய கவுன்சிலர் சிலம்பரசன் தலைமையில் நடைபெற்றது. இதில் அச்சரப்பாக்கம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜீ. தம்பு, ஊராட்சி மன்ற தலைவர் ராஜாராமன் ஆகியோர் கலந்து கொண்டு வீடு கட்டும் பணியை தொடங்கி வைத்து வீடு கட்டுவதற்கான ஆணையை வழங்கினர். உடன் கழக நிர்வாகிகள் சரத்குமார், தங்கராஜ், ராதா, குமரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் கனவு திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் கீழ் கல்லூரி கனவு – 2025 திட்டத்தை திருவள்ளூர் கல்வி மாவட்டம் திருவள்ளூர் தொகுதி, பூண்டி ஒன்றியம், பாண்டூர் இந்திரா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் திருவள்ளூர் மாவட்ட கல்வித்துறை சார்பில் மாவட்ட கல்வி அலுவலர் (பொறுப்பு ) திருமதி. மோகனா தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினரும், இந்திரா கல்விக் குழுமத்தின் நிறுவனத் தலைவருமான வி. ஜி. இராஜேந்திரன் துவக்கி வைத்தார்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, எம்.எல்.ஏ., ரிஷி சந்தோஷ் |
| 2 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 3 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

சென்னை வடகிழக்கு, தஞ்சாவூர் வடக்கு, புதுக்கோட்டை வடக்கு & தெற்கு, நாகப்பட்டினம் மற்றும் தஞ்சாவூர் தெற்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | சென்னை வடகிழக்கு | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| 22.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் வடக்கு | ரயாஸ் கிராண்ட் ஹோட்டல், மகாமகம் குளம் எதிரில், கும்பகோணம். |
| 24.05.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | புதுக்கோட்டை வடக்கு & தெற்கு | கற்பகவிநாயகா திருமண மண்டபம், மாலையீடு, புதுக்கோட்டை. |
| 26.05.2025 திங்கள்கிழமை | காலை 10.00 மணி | நாகப்பட்டினம் | தளபதி அறிவாலயம், நாகப்பட்டினம். |
| 27.05.2025 செவ்வாய்க்கிழமை | காலை 10.00 மணி | தஞ்சாவூர் தெற்கு | ஏஏஏ பேலஸ், பேருந்து நிலையம் அருகில், பட்டுக்கோட்டை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல் கீழ்க்கண்ட 6 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 17.05.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | எழும்பூர் | அறிஞர் அண்ணா மாளிகை, சச்சிதானந்தம், 2–வது தெரு, கொசப்பேட்டை, சென்னை–12. |
| 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருவொற்றியூர் | டி.கே.பி திருமண மாளிகை, திருவொற்றியூர், சென்னை–19. |
| | மாலை 4.00 மணி | வில்லிவாக்கம் | டபிள்யூ.பி.ஏ.சவுந்திர பாண்டிய நாடார் பள்ளி வளாகம், என்.எம்.கே.தெரு, அயனாவரம், சென்னை–23. |
| 19.05.2025 திங்கள்கிழமை | மாலை 4.00 மணி | விருகம்பாக்கம் | கோல்டன் பேரடைஸ் திருமண மண்டபம், சாலிகிராமம், சென்னை–93. |
| 20.05.2025 செவ்வாய்க்கிகிழமை | மாலை 4.00 மணி | மதுரவாயல் | ஸ்ரீ ராஜலட்சுமி மகால், 4, பிள்ளையார் கோயில் தெரு, ஆற்காடு சாலை, கணபதி நகர், போரூர், சென்னை–116. |
| | மாலை 4.00 மணி | அம்பத்தூர் | கே.எஸ்.பி. மகால், 12, காமராஜர் சாலை, கோபால் நாயக்கர் நகர், பாடி, சென்னை–50. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 15-05-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி